நாள்: 12.03.2023
O.S. No. 351/ 2022
வா.சா.1
பெயர்: திருமதி.பச்சையம்மாள்
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என் தகப்பனார் இறக்கும்போது அவருக்கு வயது எவ்வளவு என்று எனக்கு தெரியாது. என் தாயார் கோவிந்தமாள் இறக்கும் போது அவருக்கு வயது எவ்வளவு என்று தெரியாது. என் தாயார் முதலிலும் அதன் பிறகு என் தகப்பனார் இறந்தார். என் தாயார் இறந்து எத்தனை நாட்கள் கழித்து என் தகப்பனார் இறந்தார் என்று எனக்க தெரியாது. கடந்த 30 ஆண்டு காலமாக சென்னையில் வசித்து வருகிறேன். என் தகப்பனார் நான் வசித்து வந்த சென்னைக்க வந்தபோது நன்றாக தான் இருந்தார்., அவருக்கு பக்கவாதம் எப்போது வந்தது என்று குறிப்பிட்டு தெரியாது., ஆனால் ஊருக்கு கிளம்பும் போது பக்கவாதம் ஏற்பட்டது. ஊருக்கு சென்னையில் இருந்து கார் வைத்து களம்பூருக்கு அனுப்பினேன். என் தகப்பனார் நான் ஒரு தப்பு செய்து விட்டேன் என்று சொல்லப்பட்ட விஷயம் எப்போது என்றால் குறிப்பிட்டு எனக்கு தெரியாது. என் தகப்பனாரும் என் தாயாரும் 2ம் பிரதிவாதி சதீஷ் கட்டியுள்ள வீட்டில் தான் இறப்பு அதற்கான சம்பர்தாயம் நடந்தது. சதீஷ் குடியிருக்கும் வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. என் தகப்பனார் கையெழுத்து செய்து கிரையம் ஏதும் செய்யவில்லை என்று வழக்குரையில் சொல்லப்பட்ட சங்கதிக்கு ஏதுவாக அவரது கையெழுத்து இல்லை என்பது குறித்து நீதிமன்றத்தின் மூலம் தடயவியல் ஆய்வுக்கு ஏதும் உட்படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதியான எனது தங்கை அமுதா திருமணத்திற்கு பிறகு எங்கு வசித்து வந்தார் என்றால் கல்காத்தாவில் வசித்து வந்தார்கள். கல்காத்தாவில் என் தங்கையின் கணவர் சுரங்கத்தில் வேலை செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு குறிப்பிட்டு தெரியாது. என் தகப்பனாருக்கு பிறந்த குழந்தைகள் மூன்றும் பெண் குழந்தைகள் என்பதால் அவரை உடனிருந்து பார்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பானரை பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக கொல்காத்தாவில் வசித்து வந்த என் சகோதரி அமுதாவை நாங்கள் வரவழைத்தோம் என்று நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பானரை 2000ம் ஆண்டில் இருந்து 2014ம் ஆண்டு வரை உடனிருந்து என் சகோதரி அமுதாவின் குடும்பத்தார் பார்த்து வந்தார்கள்

என்றால் சரிதான்.  ஆனால், என் தகப்பனார் மாத பென்ஷன் தொகை ரூ.1,000/- பெற்று வந்தததை பெற்றுக்கொண்டு தான் அவர்கள் பார்த்துக்கொண்டார்கள். மேலும் என் தகப்பனாரின் நிலத்தில் இருந்து வந்த வருமாத்தை வைத்து அவரை பார்த்து கொண்டார்கள். என் தகப்பனாருக்கு தாவா A இலக்கமிட்ட சொத்தில் ஒரு கூரை வீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வீடு தற்போது இடிந்துவிட்டது. என் சகோதரி அமுதா  கட்டிய தாவா B இலக்கமிட்ட சொத்தில் கட்டப்பட்ட வீட்டின் கிரகபிரவேசத்திற்கு நான் சென்று இருந்தேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சதீஷ்க்கு நாளாது தேதியில் இருந்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக திருமணம் நடந்தது. அவரது திருமணத்திற்கு எனது குடும்பத்தார் யாரும் செல்லவில்லை. ஏன் செல்லவில்லை என்றால் மேற்படி அமுதா சொத்தை தன்னுடைய மகனின் பெயருக்கு எழுதி வைத்துள்ளதால் அவரது திருமணத்திற்கு செல்ல வேண்டாம் என்று எனது மகன் சொன்னதன் பெயரில் நாங்கள் செல்லவில்லை. 2ம் பிரதிவாதியின் திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைபடத்தில் நாங்கள் இருந்தால் அதை ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் தவறாக புனையப்பட்டு இருந்தால் அதை ஏற்க முடியாது. 2ம் பிரதிவாதியின் நிச்சிய தாம்புலத்தின் போது சென்று இருந்தோம். எனது மகளின் பெயர் துர்கா, பேத்தியின் பெயர் சந்தியா, சங்கீதா. மேற்படி சங்கீதா, சந்தியாவிற்கு 2ம் பிரதிவாதி முறை உரிமை கொண்டவர்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது பேத்திகளை திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை என்பதை காழப்புணர்ச்சியாக கொண்டு தான் இந்த வழக்கை வழக்க பற்றிய அனைத்து விவரங்கள் தெரிந்து இருந்தும், பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர்கள் தாவா சொத்தில் இருந்த இடத்தில் குடியிருந்தபோது 1,2 பிரதிவாதிகள் அவரது இறுதி காலம் வரை உடனிருந்து பார்த்ததோடு அல்லாமல் என் தகப்பனாருக்கு பக்கவாதம் வந்தபோதும் அவர்கள் தான் உடனிருந்து கவனித்து கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான், அதேசமயம் நாங்களும் தான் பார்த்துக்கொண்டோம். அவ்வாறு பெற்றோர்களை பராமரித்து வந்தபோது மருத்துவ செலவு மற்றும் இதர செலவுகளை 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் 2ம் பிரதிவாதிக்காக சேமித்து வைத்திருந்த தொகையை கொண்டு தான் பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான், நாங்களும் செலவு செய்தோம். அவ்வாறு பராமரித்து வந்தபோது என் தகப்பனார் தான் அவருக்கு உரிய ஒரு பகுதியை விற்று தனக்கான

மருத்துவ செலவை செய்து கொள்ளும்படி என்னிடமும் மற்றொரு சகோதரியான அம்புஜம் மற்றும் 1ம் பிரதிவாதியான அமுதா ஆகியோரிடம் கேட்டு இருந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனாரை பராமரிப்பதற்காக 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் தன்னுடைய மகனான 2ம் பிரதிவாதிகாக சேமித்து வைத்திருந்த தொகையை கொண்டு தன்னை பராமரித்து வருவதாகவும் மேற்கொண்டு ஏற்படும் செலவையும் நாங்கள் செய்ய தயாராக உள்ளோம் அதற்காக எங்களுடைய மகனான 2ம் பிரதிவாதி பெயருக்கு ஏதேனும் ஒரு சொத்தை எழுதி கொடுப்பதாக என் தகப்பனார் தான் சொன்னார் என்றால் சரியல்ல. என் தகப்பனாரை எனது தங்கை அமுதாவும் அவரது மகனும் அடித்து உதைத்தார்கள் அதை நான் நேரில் பார்த்தேன். அவ்வாறு அடித்து உதைத்து தான் ஆவணத்தில் கையெழுத்து செய்வதற்காக என் அப்பாவை அழைத்து சென்றார்கள். அவ்வாறு அடித்து உதைத்தது சம்பந்தமாக என் தகப்பனார் புகார் ஏதும் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் தாவா B இலக்கமிட்ட சொத்து 2018 ஆண்டு வரை காலி இடமாக இருந்தது என்று கூறியுள்ள விவரம் சரிதான். தாவா B இலக்கமிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 12 செண்ட் என்றால் சரிதான். அந்த சொத்தில் என் தகப்பனாரின் வாரிசு தார்கள் என்ற முறையில் தலா 4 செண்டு வீதம் பாக பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். தாவா B இலக்கமிட்ட சொத்தில் 1,2 பிரதிவாதிகள் அனுபவத்தில் 6 செண்டு உள்ளது. அவ்வாறு 1ம் பிரதிவாதியினுடைய பாகத்திற்கு கூடுதலாக உள்ள 2 செண்டு இடத்தை ஊரில் உள்ள விலை மதிப்பின் படி 2 செண்டுக்கான தொகையை கொடுக்கும் பட்சத்தில் 1,2 பிரதிவாதிகள் வசம் தாவா B இலக்கமிட்ட சொத்தை அவர்களது வசம் விட எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் என்னுடைய சகோதரியான அம்புஜம் மற்றும் அவரது கணவரிடம் கேட்கமால் சொல்ல முடியாது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மேற்சொன்னவாறு 2 செண்டுக்கான தொகையை கொடுக்கும் பட்சத்தில் நானும் 2ம் வாதியும் விட்டுவிடுவதாக ஒரு பேச்சு இருந்தது, ஆனால்தற்போது அது இல்லை. வா.சா.ஆ.9 ஆவணமானது 2ம் பிரதிவாதியின் பெயரிலும் என் தகப்பனாருக்க மீதமுள்ள சொத்து என் தகப்பனாரின் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு என் தகப்னார் உரிய மறுபயனை பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக தான் தாவா B இலக்கமிட்ட சொத்தை கிரையம்எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 02.01.2012 தேதியில் நாராயணமங்கலத்தை

சேர்ந்து ஒரு வனச்சாட்சி என்பவரிடம் ரூ.2,50,000/-ஐ பெற்றுகொண்டு அதற்கு ஆதரவாக ஒரு அடமான பத்திரம் எழுதி கொடுத்து இருந்தார்கள் என்றும் அந்த பத்திரம் எழுதப்பட்ட விவரம் என் தகப்பனாருக்கு தெரியும் என்றால் சரிதான். 2018ம் ஆண்டிலும் தனியார் வங்கியில் மேற்சொன்ன கிரைய ஆவணத்தை கொண்டு அடமான பத்திரம்எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அந்த விவரம் எங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் சொல்லப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். என் தகப்பனார் உயில் சாசனம் எழுதி வைத்து இருந்தாலும் அவருடைய அயுட்காலத்தில் எப்போது வேண்டுமானலும் அதை ரத்து செய்வதற்கான உரிமை உள்ளது என்பதாலும் அவரால் எழுதி வைக்கப்பட்டதாக சொல்லப்படும் உயில் சாசனம் நடைமுறைக்க வரவில்லை என்பதாலும் தான் அவரது வாழ் நாளிலேயே 2ம் பிரதிவாதிக்கு தாவா B இலக்க சொத்தை பொறுத்து 03.09.2001 தேதியில் கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரை 1,2 பிரதிவாதிகள் அடித்து உதைத்து மேற்சொன்ன கிரைய ஆவணம் எழுதப்பட்டு இருந்தால் அது குறித்து என் தகப்பனாரோ நாங்களோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. பொய்யான காரணத்தை சொல்லி பிரதிவாதிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா A இலக்கமிட்ட சொத்தில் எனக்கும் எனது சகோதரி அம்புஜம் ஆகியோருக்க 3-ல் 2 பாகம் கிடைப்பதை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என்பதை பொறுத்து தாவா B இலக்கமிட்ட சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதில் எந்த பாத்திய உரிமையுயம் நாங்கள் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் எழுதி வைத்த 03.09.2001 தேதியிட்ட கிரைய பத்திரமானது உரிய மறுபயன் கொண்டு எழுதப்பட்ட ஆவணம் என்பதால் தான் அதில் கண்டள்ள கையெழுத்து என் தகப்பனார் உடையது அல்ல என்பதை நிரூபணம் செய்யும் பொருட்டு மேல் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருந்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sub Judge, Polur